செ.வெ.எண்: 19 நாள்: 11.01.2017

# அரியலூர் மாவட்டம், தேவனூர் கிராமத்தில் சிறப்பு மனுநீதி நாள் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.01.2017) நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், தேவனூர் கிராமத்தில் **"சிறப்பு மனுநீதி முகாம்"** மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (11.01.2017) நடைப்பெற்றது.

ஜெயங்கொண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தனர்.

இம்மனுநீதி முகாமில், வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, புதுவாழ்வுத்திட்டம், மாற்றுதிறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட அரசின் பல்வேறு துறை வாயிலாக சிறுக்கண்காட்சிகள், அரங்குகள் அமைக்கப்பட்டு துறைச்சார்ந்த அலுவலர்களால் அரசின் திட்டங்கள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

இம்மனுநீதி முகாமில், பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதில் 22 பயனாளிகளுக்கு **ரூ.1 இலட்சத்து 13 ஆயிரம்** மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்.

**இம்முகாமில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது:-**

அரியலூர் மாவட்டத்தில் பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழக அரசு சார்பில் பொங்கல் பரிசுத்தொகுப்பில் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 2 அடி நீளக் கரும்புத் துண்டு, 20 கிராம் முந்திரி, 5 கிராம் ஏலக்காய் அடங்கிய "சிறப்புப் பொங்கல் பரிசுத்தொகுப்பினை இந்த வார இறுதிற்குள் தகுதி வாய்ந்த குடும்ப அட்டைத்தாரர் அனைவருக்கும் மாவட்ட நிர்வாகம் மூலம் வழங்கப்படும். தோட்டக்கலைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சொட்டுநீர் பாசனத் திட்டம், நிலப்போர்வைத் திட்டம், மழைதூவான் திட்டம் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை பயன்படுத்தி விவசாயிகள் தங்களது வயல்களில் நல்ல மகசூல் பெறவேண்டும். ஆதார் எண் அடையாள அட்டை வழங்க இதுவரை 98 சதவீதம் மக்களுக்கு புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இதுபோன்று அரசு வழங்கும் திட்டங்களை பொதுமக்கள் பெற்று பயன் பெற வேண்டும். குறிப்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் விண்ணப்பித்தால் உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு தகுதியான நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இம்மனுநீதி முகாமில், துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) திருமதி.மங்கலம், கூட்டுறவுத்துறை துணை பதிவாளர் திரு.செல்வராஜ், உடையார்பாளையம் கோட்டாட்சியர் திரு.டினாகுமாரி, வட்ட வழங்கல் அலுவலர் திரு.கிருஷ்ணமூர்த்தி, தாட்கோ மேலாளர் திரு.கோபால், ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் திரு.திருமாறன் மற்றும் வருவாய்துறை, வளர்ச்சித்துறை மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.